MINISTRY OF MANPOWER

# CONNECT with ACE

## வெளிநாட்டு ஊழியர்களுக்கான மாதாந்திர மின் செய்திமடல்




செப்டம்பர் 2023




## இந்த இதழில்:

சட்டவிரோதமான சிகரெட்டுகளை விட்டு விலகி இருங்கள்

பாதுகாப்பாக சைக்கிள் ஓட்டுவதற்கான குறிப்பு

நிகழ்வின் சிறப்பம்சங்கள்

# சட்டவிரோதமான சிகரெட்டுகளை விட்டு விலகி இருங்கள்

வரி செலுத்தப்படாத சிகரெட்டுடன் நீங்கள் பிடிபட்டால், உங்களுக்கு $500 முதல் $5,000 வரை அபராதம் விதிக்கப்படலாம் அல்லது நீங்கள் நீதிமன்றத்திற்குச் செல்லலாம்




சட்டவிரோதமான சிகரெட்டுகள் பற்றிய இந்தக் காணொளியைப் பார்த்துவிட்டு உங்கள் நண்பர்களுடன் பகிர்ந்துக் கொள்ளுங்கள்:

# பாதுகாப்பாக சைக்கிள் ஓட்டுவதற்கான குறிப்பு

**சைக்கிள் ஓட்டும்போது கைத்தொலைபேசிகளைப் பயன்படுத்த வேண்டாம்**

இரு கைகளையும் சைக்கிள் கைப்பிடிகளில் வைத்துக்கொண்டு விழிப்புடன் இருங்கள்.

உங்கள் பாதுகாப்பு முக்கியமானது,
மற்றும் அனைவரின் பாதுகாப்பும் முக்கியம்தான்!





சைக்கிள் ஓட்ட மேலும் பாதுகாப்பான குறிப்புகளுக்கு இந்த காணொளியைப் பார்க்கவும்

# நிகழ்வின் சிறப்பம்சங்கள்




## கிராஞ்சி பொழுதுபோக்கு நிலையம் காற்பந்தாட்டப் போட்டி

இறுதி காற்பந்தாட்டப் போட்டி கிராஞ்சி பொழுதுபோக்கு நிலையத்தில் நடக்கப்பட்டது. ஆகஸ்ட் 27 அன்று காற்பந்தாட்டத் திடலில் அணிகள் மோதின. வீரர்கள், முழுமூச்சாக ஆடினர். இறுதியில் ஹா டின் எஃப்சி வெற்றி வாகை சூடியது! 🏆



## சிங்கப்பூர் குடிமை தற்காப்புப் படை(SCDF) அதிகாரிகள் நடத்திய சமூக அவசரகாலத் தயார்நிலைத் திட்டம் (CEPP) பாடத்தில் ஊழியர்கள் கலந்துகொண்டனர்

70க்கும் மேற்பட்ட வெளிநாடு ஊழிய சகோதரர்கள் SCDF அதிகாரிகளிடமிருந்து சமூக அவசரகாலத் தயார்நிலைத் திட்டம் மூலம் (CEPP) “தயார்நிலை” திறன்களைப் பெற்றனர். அவர்கள், இதயத்துடிப்பை மீண்டும் செயல்பட வைக்கும் தானியக்க உயிர்க்காப்பு சாதனத்தைப் (AED) பயன்படுத்தவும் செயற்கை சுவாச சிகிச்சையை (CPR) அளிக்கவும் மற்றும் தீப்பிழம்புகளை எதிர்த்துப் போராடவும் பயிற்சி பெற்றனர்!






## சக ஆதரவு தலைவர் பயிற்சி

சுமார் 55 வெளிநாடு ஊழிய சகோதரர்கள் கடந்த மாதம் கொக்ரேன் பொழுதுபோக்கு நிலையத்தில் நடைபெற்ற சக ஆதரவு தலைவர் பயிற்சி (PSL) பாடத்திட்டத்தை முடித்துள்ளனர்! எங்கள் புலம்பெயர்ந்த ஊழிய சகோதரர்கள் அடிப்படை மனநலப் பாதுகாப்பு, சுய-கவனிப்பு முறைகள் மற்றும் துயரத்தின் அறிகுறிகளைக் கண்டறிவது பற்றி கற்றுக்கொண்டனர்.

பயிற்சியை சாத்தியமாக்கிய ஹெல்த்சர்வ் மற்றும் அவர்களின் தொண்டூழியர்களுக்கு நன்றி!



நீங்கள் பங்கேற்கக்கூடிய பல்வேறு நேரடி மற்றும் இணைய நடவடிக்கைகளைப் பற்றி மேலும் அறிய இங்கே காணப்படும் QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்!

அண்மைய செய்திகள் மற்றும் புதுப்பிப்புகளைப் பற்றி அறிய எங்கள் அதிகாரப்பூர்வ ஒளிவழிகளில் எங்களைப் பின்தொடரவும்!

ஏஸ் குழுமத்தின் ஃபேஸ்புக் பக்கம்

ஏஸ் குழுமத்தின் டிக்டொக் ஒளிவழி